## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்

**அசல் வழக்கு எண்.19 of 2017**
**CNR No.TNTS08-000013-2017**

செந்தில்குமார் ----- வாதி

/ எதிர் /

ஹரீஷ்குமார்
(மேற்படியார் அவரது பவர் ஏஜெண்டான
கண்ணன் மூலம்) ----- பிரதிவாதி

| | | |
|---|---|---|
| முத்திரைக்கட்டணச் சட்டப்பிரிவு | - | 25(b) r/w Sec.7, 25(d) |
| வழக்கின் தன்மை | - | விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம், விளம்புகை |
| வழக்கின் மதிப்பு | - | ரூ.1000/- + ரூ.1000/- மொத்தம் ரூ.2,000/- |
| நீதிமன்ற முத்திரைக்கட்டணம் | - | ரூ.75.50/- + ரூ.75.50/- மொத்தம் ரூ.151.00/- |

//உத்தரவுப்படி//

தலைமை எழுத்தர்

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
சங்கரன்கோவில்
2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18–ம் நாள் புதன்கிழமை
**அசல் வழக்கு எண்.19 of 2017**
**CNR No.TNTS08-000013-2017**

திருவேங்கடம் வட்டம், மைப்பாறை கிராமம் மற்றும் அஞ்சல், மேலத்தெருவில் பழைய கதவு எண்.7/73 ஏ–க்கு புதிய எண்.129 ல் இருக்கும் லேட்.சீனிவாசக நாயக்கர் அவர்கள் குமாரர், இந்து, வயது 42 உள்ள செந்தில்குமார்

––––– வாதி

/ எதிர் /

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், பூவிருந்தவல்லி கிராமம், தேரடித்தெருவில் கதவு எண்.3 ல் இருக்கும் மாங்கிலால் அவர்கள் குமாரர், இந்து, வயது 43 உள்ள ஹரீஷ்குமார் (மேற்படியார் பூவிருந்தவல்லி சார்பதிவக பதிவு ஆவண எண்.420/2008/புத்தகம் 4–ன்படி நியமனம் செய்துள்ள அவரது பவர் ஏஜெண்டும், சென்னை 37, முகப்பேரி மேற்கு, 3 வது பிளாக், கதவு எண்.100 ல் இருக்கும் சண்முகம் அவர்களின் குமாரருமான, இந்து, வயது 44 உள்ள கண்ணன் மூலம்)

––––– பிரதிவாதி

இவ்வழக்கானது வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908, பிரிவு 26 மற்றும் கட்டளை VII, விதி 1 ன் கீழ், பிராதின் தபசில் சொத்து வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டதென பிரதிவாதிக்கு எதிரில் விளம்புகை செய்வதன் மூலம் பிராதின் தபசில் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்துவருவதை பிரதிவாதியோ, அவரின் வாரிசுகளோ, வகையறாக்களோ, வேலையாட்களோ, ஏஜெண்ட்களோ அல்லது மற்றவர்களோ யாதொரு விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யாதிருக்கும் பொருட்டு பிரதிவாதி வகையறாவுக்கு எதிரில் ஒரு நிரந்தர ஏவுகட்டளை உத்தரவு பிறப்புவிக்கும்படிக்கும், பிரதிவாதி பெயருக்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ள 06.10.2008 தேதிய கழுகுமலை சார்பதிவாளர் அலுவலக பதிவு ஏற்பாடு ஆவண எண்.2407/2008 பிராதின் தபசில் சொத்தைப் பொறுத்து செல்லத்தக்கதில்லை என்று தீர்மானித்து குறித்ததை ஆற்றிப்போகும் சட்டம் பிரிவு 31 ன்படி

இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும் தீர்ப்பாணை நகலை மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி மேற்படி சார்பதிவாளர் அவர்களால் அவர்களின் அலுவலக கோப்புகளில் செல்லத்தக்கதில்லை என்ற உரிய பதிவு மேற்கொள்ள தகுந்த உத்தரவு பிறப்புவிக்கும்படிக்கும் மற்றும் இவ்வழக்கின் செலவுத் தொகை வேண்டியும் வாதியால் இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 23.01.2017 |
| வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | : | 23.01.2017 |
| வழக்கு மூலம் | : | 13.12.1972, 17.07.1972, 12.07.2000, 2001ம் வருடம், 28.05.2012, 13.06.2012 திருவேங்கடம் வட்டம், மைப்பாறை கிராமத்தில் வைத்து உண்டாகிற்று. |
| வழக்கு மதிப்பு | : | ரூ.1000/– + ரூ.1000/–<br>மொத்தம் ரூ.2,000/– |
| நீதிமன்ற முத்திரை கட்டணம் | : | தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டண சட்டம் பிரிவு 25(b) r/w Sec.7ன் படி 'அ' பரிகாரத்திற்கு ரூ.75.50/–ம், பிரிவு 25(d)ன் படி 'ஆ' பரிகாரத்திற்கு ரூ.75.50/–ம் மொத்தம் ரூ.151.00/– நீதிமன்ற முத்திரைக் கட்டணம் வாதியால் செலுத்தப்பட்டுள்ளது. |

நீதிமன்ற அதிகார வரம்பிற்காகவும், நீதிமன்ற முத்திரை கட்டணத்திற்காகவும், பரிகாரத்திற்காக வாதி தனது தாவாவை 'அ' பரிகாரத்திற்கு பிராதின் தபசில் சொத்துக்கள் ரயத்துவாரி நிலமாதலால் அதன் தீர்வை மதிப்பு ரூ.7.30ன் 30 மடங்கு ரூ.219/– ஆக இருந்தபோதிலும், அதிகபட்சமாக நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூ.1000/–க்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணம் சட்டப்பிரிவு 25(b) r/w Sec.7–ன் படி ரூ.75.50/–ம், 'ஆ' பரிகாரத்திற்கு ரூ.1000/– என மதித்து அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணம் சட்டப்பிரிவு 25(d)–ன் படி ரூ.75.50/–ம் ஆக மொத்தம் ரூ.151.00/– நீதிமன்ற முத்திரைக் கட்டணம் வாதியால் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கானது 11.02.2026-ம் தேதி இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு செய்தித்தாள் மூலம் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் பிரதிவாதி 20.08.2018 ம் தேதி இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள் மற்றும் வாத உரை ஆகியவைகளை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த இவ்வழக்கில் இன்று இந்நிதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்பாணை</u>**

| | |
|---|---|
| 1. | இவ்வழக்கானது அனுமதிக்கப்பட்டு ஆணையிடப்படுகிறது. |
| 2. | வழக்கு தபசில் சொத்துக்கள் வாதிக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டது என பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது. |
| 3. | மேலும், தபசில் சொத்துக்களை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, வேலையாட்களோ அல்லது வாரிசுகளோ யாதொரு வகையிலும், எவ்வித இடையூறுகளும் செய்யக்கூடாதென மேற்படியார்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஆணையிடப்படுகிறது. |
| 4. | மேலும், பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்டுள்ள வா.சா.ஆ.9 ஆன 06.10.2008 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் வழக்கு தபசில் சொத்துக்களை பொறுத்தமட்டில் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல (Null and Void) என விளம்புகை செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது. |
| 5. | மேலும், இந்நீதிமன்ற தீர்ப்பாணையை கழுகுமலை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி மேற்படி சார்பதிவாளர் அவர்களால் அவர்களின் அலுவலக கோப்புகளில் வா.சா.ஆ.9 ஆன 06.10.2008 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் வழக்கு தபசில் சொத்துக்களை பொறுத்தமட்டில் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற உரிய பதிவை மேற்கொள்ள இந்நீதிமன்றத்தால் ஆணையிடப்படுகிறது. |

| | |
|---|---|
| 6. | பிரதிவாதி வாதிக்கு வழக்கின் செலவுதொகையாக **ரூ.1161.00/-** செலுத்த வேண்டுமென்று ஆணையிடப்படுகிறது. |

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் நாளாகிய இன்று என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இதனடியில் வைக்கப்பட்டது.

(Sd/-M. Alima)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**செலவுதொகை விபரம்**

| வாதி தரப்பு | | பிரதிவாதி தரப்பு |
|---|---|---|
| நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | ரூ. 151.00/- | (தாக்கல் செய்யப்படவில்லை) |
| வக்காலத்து ஸ்டாம்பு | ரூ. 10.00/- | |
| முதுநிலை வழக்கறிஞர் பீஸ் | ரூ.750.00/- | |
| இளநிலை வழக்கறிஞர் பீஸ் | ரூ.250.00/- | |
| ஆக மொத்தம் | ரூ.1161.00/- | |

**தபசில்**

பாளையங்கோட்டை ரிடி., கழுகுமலை சப்டி, திருவேங்கடம் வட்டம், மைப்பாறை கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்கள்.

1) 325/1 - 0.91.0 ஏர்ஸ் (2 ஏக்கர் 25 செண்ட்) தீர்வை ரூ.3.80

2) 325/2 - 0.84.0 ஏர்ஸ் (2 ஏக்கர் 7 செண்ட்) தீர்வை ரூ.3.50

ஆக மொத்தம் 4 ஏக்கர் 32 செண்ட் நிலமும் தபசில் சரி.

(Sd/-M. Alima)
S.T. H.C PDM, Sankarankovil

**தீர்ப்பாணை**
அசல் வழக்கு எண்.19/2017
நாள் : 18.03.2026
மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்.